# அறிவித்தல்

## வாகன புகை பரீட்சித்தல் நம்பிக்கை நிதியம் - மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம்

## வாகன புகை பரீட்சித்தல் செயற்பாட்டு அலுவலகம்

# வெற்றிட பதவிகளுக்காக இரட்டை அடிப்படையில் அபிவிருத்தி அதிகாரிகளை சேர்த்துக் கொள்ளல்

மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்தில் அமைந்துள்ள வாகன புகை பரீட்சித்தல் நம்பிக்கை நிதியத்தின் வாகன புகை பரீட்சித்தல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ்க்காணும் வேலைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக இரட்டை அடிப்படையில் தற்போது அரச சேவையில் ஈடுபட்டுள்ள அபிவிருத்தி அதிகாரிகளைச் சேர்த்துக் கொள்வதற்கு தகைமையுடைய விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- வாகன புகை பரீட்சித்தல் நிலையத்தின் மதிப்பீட்டிற்காக கணக்காய்வு அதிகாரியாக செயற்படுவதற்கு மற்றும் அந் நிலையங்களில் காணப்படும் பிழைகளை திருத்துவதற்குத் தேவையான தரப்பினருடன் செயற்படுதல்
- வீதிப் பரிசீலனை, தளபுகைப் பரீட்சித்தல் நிகழ்ச்சித் திட்டத்தை ஒழுங்குபடுத்தி, அறிக்கைகளை தயாரித்தல்.
- வாகன புகை பரீட்சித்தல் சுற்றாடலுக்கு இசைவான மற்றும் பாதுகாப்பாக வாகனமோட்டுதல் பற்றி பல்வேறு நிறுவனங்களின் சாரதிகள்/ போக்குவரத்து அதிகாரிகளை பயிற்றுவிப்பதற்காக பயிற்சி பாடநெறிகளை நடத்துதல் மற்றும் சகல இணைப்பு விடயங்களையும் மேற்கொள்ளல்.
- வாகன புகை பரீட்சித்தல் மற்றும் சம்பந்தப்பட்ட ஆய்வு விடயங்கள் பற்றி அறிவு பெறுதல். ஆய்வு மற்றும் அபிவிருத்தி விடயங்களைத் திட்டமிடல் மற்றும் ஆய்வு மேற்கொள்ளும் நிறுவனங்கள் மற்றும் இணைத்தல் மற்றும் குறித்த அறிக்கைகளை மதிப்பீடு செய்தல்.
- ஆய்வு தரவு மற்றும் அசையும் வாயு தரத்தை தரவு ஆய்வு செய்தல் மற்றும் அதன் பிரகாரம் வாகன வாயு பரீட்சித்தல் நிகழ்ச்சித் திட்டத்தின் தகவல் மற்றும் திட்டமிடல்களை மேற்கொள்ளல். புள்ளிவிபரங்களின் படி தகவல்களை நடத்திச் செல்லல் மற்றும் தரவுகளை வெளியிடுதலுக்கு தேவையான விடயங்களை மேற்கொள்ளல்.
- கராஜ் தொழில்நுட்பவியலாளர்களை அறிவூட்டுதல், நாடளாவிய ரீதியில் சகல தொழில்நுட்ப கல்லூரி இணைப்பு மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை ஆரம்பிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- முன்னேற்ற கலந்துரையாடல் மற்றும் ஏனைய கூட்டங்களை கோரல் மற்றும் குறித்த நிறுவனங்கள் சகலதையும் இணைத்தல், தொழில்நுட்ப ஆலோனை சபையுடன் இணைத்த மற்றும் தேவையான உபகமிட்டிக் கூட்டங்களை ஒழுங்குபடுத்தல்.

## அபிவிருத்தி அதிகாரி (பதவிகள் - 03)

**கல்வித் தகைமைகள் :-**

அ. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டம் வழங்கும் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட கீழ்க்காணும் பாடங்களில் ஒரு பாடம் உட்பட சாதாரண பட்டத்தைப் பெற்றிருத்தல்.

- o பௌதீக விஞ்ஞானம்/ இரசாயனம்/ பிரயோக விஞ்ஞானம்/ சுற்றாடல் முகாமைத்துவம்/ புள்ளிவிபரவியல்/ தகவல் தொழில்நுட்பம்/ கணக்கியல் பொருளியல்/ மனித வள அபிவிருத்தி/ பொறியியல் தொழில்நுட்பம்

**1. வயதெல்லை**

22 வயதிற்கு குறையாமலும் 35 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
(அரச பதவிகளை வகிப்பவர்களுக்கு இந்த வயதெல்லை பொருந்தாது)

**2. மாதாந்த சம்பளம்**

அரச நிர்வாக சுற்றுநிருபம் 03/2016 சுற்றுநிருபத்தின் பிரகாரம் MN 4 - 2016 சம்பள அளவிற்கு உரித்தான சம்பளம் வழங்கப்படுவதுடன் (வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு மற்றும் அரசு அனுமதித்த - கொடுப்பனவுகள் செலுத்தப்படும்) அடிப்படைச் சம்பளத்தின் நான்கில் ஒரு கொடுப்பனவு மாதாந்தம் புகை பரீட்சித்தல் பொறுப்பு நிதியத்தினால் செலுத்தப்படும்.

**3. பதவிகளின் தன்மை**

இப்பதவி ஒரு வருட காலத்திற்கு ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டு, விண்ணப்பதாரிகளின் செயற்பாடுகள் மற்றும் செயற்றிட்டத்தின் சேவையின் தேவைப்பாட்டின் படி அதிகூடியதாக 03 வருட கால எல்லைக்கு புதுப்பிக்கப்படும்.

**4. விண்ணப்பிக்கும் முறை**

- மேற்படி பதவிக்காக எம்மால் வழங்கப்படும் மாதிரிப் பத்திரத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை அனுப்ப வேண்டியதுடன் பதவிக்காக குறித்த விண்ணப்பப்படிவ மாதிரிகளை www.vet.lk இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
- பிறந்த தினம், கல்வித் தகைமைகள், தொழில்சார் தகைமைகளை உறுதி செய்யக் கூடிய ஆவணங்களின் போட்டோப் பிரதிகளை இணைத்து அனுப்ப வேண்டும்.
- முறையாகப் பூர்த்தி செய்த விண்ணப்பங்கள். செயற்றிட்டப் பணிப்பாளர், வாகன புகை பரீட்சித்தல் செயற்றிட்ட அலகு, மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம், த.பெ.இல. 533 - 341 நாராஹேன்பிட்ட, கொழும்பு - 05, என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் 2024.07.31ம் திகதிக்கு முன் கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். அத்தினத்தின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் எந்த அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும்.
- கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் இரட்டை அடிப்படையில் வாகன புகை பரீட்சித்தல் செயற்றிட்ட அலகின் அபிவிருத்தி அதிகாரி பதவிக்கு சேர்த்துக் கொள்ளல் என்று குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.
- இதுவரை ஏதேனும் நிறுவனத்தில் கடமையாற்றும் விண்ணப்பங்கள் தமது விண்ணப்பத்தை திணைக்கள தலைமையூடாக சமர்ப்பித்தல் வேண்டும்.
- அடிப்படை தகைமைகளைப் பரீட்சித்த பின்னர் தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகள் மட்டும் நேர்முகத் தேர்விற்காக கோரப்படும்.

**செயற்றிட்டப் பணிப்பாளர் நாயகம்,**
**வாகன புகை பரீட்சித்தல் பொறுப்பு நிதியம்.**